இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 06.07.2026

# கவிழ்ந்து கிடப்பதைக் கவிழ்க்கத் தேவையில்லை!

“நாட்டில் இருக்கும் சூழ்நிலையைப் பார்த்தால் எப்போது வேண்டுமானாலும் தேர்தல் வரலாம். மூன்று மாதத்திலோ, ஆறு மாதத்திலோ கூட வரலாம். எப்போது தேர்தல் வந்தாலும் தயாராக இருங்கள்” என்று தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னார்கள். உடனே ‘போலி ஜனநாயகனின்’ காப்பாளர்கள் பொங்குகிறார்கள். ‘அவர் எப்படி அப்படிச் சொல்லலாம்? மக்கள் தீர்ப்பை ஏற்க வேண்டும்’ என்று ராஜாவை மிஞ்சிய ராஜ விசுவாசியாகக் கூவுகிறார்கள்.

**180 தொகுதிகளைக் கைப்பற்றி ஆட்சி அமைத்துள்ளாரா விஜய்? 160 தொகுதிகளைக் கைப்பற்றி ஆட்சி அமைத்துள்ளாரா விஜய்? பெரும்பான்மையை நிரூபிக்கத் தேவையான 118 இடங்களையாவது அவருக்கு கொடுத்தார்களா தமிழ்நாட்டு மக்கள்? இல்லை. 108 இடங்களில் தான் விஜய் வென்றார். அவருக்கு முதலமைச்சர் மகுடத்தை தமிழ்நாட்டு மக்கள் சூட்டவில்லை. கடன் வாங்கி, பிச்சை எடுத்து, பலரையும் ஏமாற்றி, பொய் சொல்லி, இன்னும் பல காரியங்களைச் செய்து முதலமைச்சர் பதவியில் விஜய் உட்கார்ந்து இருக்கிறார். எனவே இது ஆடும் நாற்காலி என்பது நம்மை விட விஜய்க்கு நன்கு தெரியும். இது கவிழும் நாற்காலி என்பதும் நம்மை விட விஜய்க்கு நன்கு தெரியும்.**

விஜய் ஆட்சி அமைக்க ஆதரவு தந்த 25 அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களுக்கு அமைச்சர் பதவி தருகிறோம். வாரியத் தலைவர் பதவி தருகிறோம் என்று பொய் வாக்குறுதி தரப்பட்டது. கொறடா உத்தரவை மீறினால் இவர்கள் பதவி போய்விடும் என்று அனைவருக்கும் தெரியும். அப்படிச் சொல்லி ஏமாற்றினார்கள். அதனால் 25 பேர் விஜய் ஆட்சிக்கு ஆதரவாக வாக்களித்தார்கள். பதவி கிடைக்கவில்லை என்றதும் 19 பேர் மீண்டும் எடப்பாடி பழனிசாமி தலைமையை ஏற்றுக் கொண்டு போய்விட்டார்கள். அதாவது விஜய்க்கு ஆதரவாக வாக்களித்த 19 பேர் இப்போது விஜய் ஆட்சிக்கு எதிரான மனநிலையில் இருக்கிறார்கள்.

**விஜய்க்கு ஆதரவாக வாக்களித்த அ.தி.மு.க.வைச் சேர்ந்த 6 பேர் இப்போது எம்.எல்.ஏ.வாகவே இல்லை. நாளையே நம்பிக்கையில்லா தீர்மானம் வந்தால் இவர்களால் வாக்களிக்க முடியாது. இவர்கள் அனைவரும் குதிரை பேரம் நடத்தி ராஜினாமா செய்ய வைக்கப்பட்டவர்கள். ‘நீங்கள் ராஜினாமா செய்தால், இடைத்தேர்தல் வரும். இடைத்தேர்தல் நடந்தால் உங்களை வேட்பாளர் ஆக்கி ஜெயிக்க வைக்கிறேன்’ என்று விஜய் ஜீபூம்பா பாணியில் கொடுத்த பசப்புக்கு பல்லிளித்து ராஜினாமா செய்தவர்கள் இவர்கள். இவர்களது ராஜினாமா நாடகத்தின் சதிக்காட்சிகளை தேர்தல் ஆணையம் அறியும். எனவே இப்போதைக்கு இந்த ஆறு தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் வரப்போவது இல்லை. ‘ஜனநாயகன்’ ரிலீஸ் போலவே கிடப்பில் போட்ட விஷயமாக இந்த ஆறு தொகுதி நிலைமை ஆகப் போகிறது.**

காங்கிரஸ் கட்சி இரண்டு அமைச்சர் பதவிக்காக விஜய்யை ஆதரிக்கிறது. ‘தேர்தலுக்கு முன்பு போயிருந்தால் 70 எம்.எல்.ஏ., ஒரு துணை முதலமைச்சர், பத்து மந்திரிகள் வாங்கி இருக்கலாம்’ என்று இப்போதே துணை முதலமைச்சராகவே பேசிவருகிறார் போக்சோ புகழ் அமைச்சர் விஸ்வநாதன். இவர்கள் உள்ளாட்சித் தேர்தலில் விஜய்யை ஒரு வழி செய்து விடுவார்கள்.

விஜய் ஆட்சியை ஆதரித்து வாக்களித்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், ‘த.வெ.க.வின் கூட்டணியில் நாங்கள் இல்லை’ என்று சொல்லி விஜய் நடத்திய கூட்டணிக் கட்சிகள் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. அந்தளவுக்கு விஜய் ஆட்சியை ஆதரிக்க வெட்கமாக இருக்கிறது கம்யூனிஸ்ட்டுகளுக்கு!

**விஜய் ஆட்சிக்கும், கட்சிக்கும் ஆதரவு தந்து விஜய் கட்சியோடு கூட்டணி சேர்ந்துள்ளார் வைகோ. ‘உங்கள் கட்சி எம்.எல்.ஏ.க்கள் இருவரையும் ராஜினாமா செய்யச் சொல்லுங்கள். இடைத்தேர்தலுக்கு நானே வந்து பிரச்சாரம் செய்து ஜெயிக்க வைக்கிறேன்’ என்று விஜய் சொன்னதை வைகோவே பொதுவெளியில் சொல்லி குதிரை பேரத்தை உறுதி செய்துள்ளார். இவரது வாக்குமூலமே போதும் குதிரை பேரம் நடந்ததை உறுதி செய்வதற்கு.**

காதர் மொய்தீன் கட்சியைப் பொறுத்தவரையில், விஜய் ஆட்சிக்கு ஆதரவு என்று காதர்மொய்தீன் கட்சி அதிகாரப்பூர்வமாக கடிதம் கொடுப்பதற்கு முன்பே, தங்களுக்கு இந்தக் கட்சியின் ஒரு எம்.எல்.ஏ. ஆதரவு இருக்கிறது என்று ஆளுநருக்கு விஜய் கடிதம் கொடுத்து விட்டார். ஒருவேளை காதர் மொய்தீன் ஆதரிக்கவில்லை என்றால் அந்த எம்.எல்.ஏ.வும் கட்சி மாறி இருப்பார். அதுதான் உண்மை.

**அ.ம.மு.க.வின் ஒரு உறுப்பினர் ஆதரவு என்பது அப்பட்டமான குதிரை பேரம் ஆகும். இதற்கு வீடியோ ஆதாரங்கள் இருக்கிறது. இது தொடர்பாக நுங்கம்பாக்கம் காவல் நிலையத்தில் டி.டி.வி. தினகரன் புகார் கொடுத்துள்ளார். ஆளுநரிடமும் வாக்குமூலம் கொடுத்துள்ளார். ஒரு அமைச்சர் பதவிக்காக, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி விஜய் ஆட்சியை ஆதரிக்கிறது.**

இவை அனைத்தும் சேர்ந்து தான் விஜய் முதலமைச்சராக நீடிக்கக் காரணமே தவிர, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மிகப்பெரிய செல்வாக்கோடு அவர் அமரவுமில்லை. அப்படி அமர்ந்தவர் கவிழ்ந்து போவார் என்று நாம் சொல்லவுமில்லை. அவரே கவிழ்ந்து தான் கிடக்கிறார். கவிழ்ந்து கிடப்பவரைக் கவிழ்க்கத் தேவையில்லை.

அவர் கவிழ்ந்து கிடக்கிறார் என்பதற்கு உதாரணம் தான், சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறவர்களை ராஜினாமா செய்ய வைப்பது ஆகும். தன்னை ஆதரிக்கும் யாரையும் விஜய் நம்பவில்லை. நம்பத் தயாராக இல்லை. ‘தங்களை வெற்றி பெற வைத்தவரையே காலை வாரிவிட்டு வந்தவர்கள் இவர்கள்’ என்பதை விஜய் அறியமாட்டாரா? அதனால் தான் இவர்களை விட தன்னையே நம்புகிறார் விஜய். கூட்டணிக் கூட்டம் எல்லாம் முள்வேலிக்கு பெயிண்ட் அடிக்கும் காரியங்களே!


**பல்வேறு பேரங்களின் மூலமாக அ.தி.மு.க. உறுப்பினர்களை விஜய் ராஜினாமா செய்ய வைக்கிறார். 12 பேர் வரை ராஜினாமா செய்ய வைப்பது அவரது திட்டம். இதற்கு யார் முதலீடு செய்கிறார்கள், எவ்வளவு முதலீடு செய்யப்படுகிறது என்பதை அதிகார மட்டங்கள் அறிந்தவர்கள் அறிவார்கள். இது யாருடைய ஆட்சி, யாருடைய நலனுக்கான ஆட்சி இது என்பதையும் அனைவரும் அறிவோம். இந்த முகத்திரை கொஞ்சம் கொஞ்சமாக விரைவில் கிழியும்.**

**கவிழும் போது மொத்தமாய்த் தெரியும்!**

# ரூ.50 கோடி, அமைச்சரவையில் இடம் – தி.மு.க. எம்.எல்.ஏ.க்களிடம் பேரம்!

# சட்டத்திற்குப் புறம்பாகச் செயல்படும் த.வெ.க. அரசு!

## ஆளுநரை நேரில் சந்தித்து தி.மு.க. சார்பில் புகார்!



**சென்னை, ஜூலை 6–**

**தி.மு.க. சார்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, தலைமைக் கழக தலைமை சட்ட ஆலோசகர் பி.வில்சன் எம்.பி., எஸ். ஆஸ்டின் எம்.எல்.ஏ., சட்டத் துறை இணைச்செயலாளர் இ.பரந்தாமன் ஆகியோர் ஆளுநரிடம் புகார் கடிதம் வழங்கினர்.**

கடந்த 1.7.2026 அன்று ஆளுநர் அவர்களுக்கு அனுப்பட்ட புகாரில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்த கருத்து குறித்து கடிதம் எழுதப்பட்டது. அது குறித்து நேற்று ஆளுநர் அவர்களை நேரில் சந்தித்து முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட சீர்காழி மற்றும் கடையநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களை ராஜினாமா செய்யச் சொல்லி, இடைத்தேர்தலில் த.வெ.க.கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெறச் செய்வதாக வைகோ அவர்கள் அளித்த செய்தியாளர்களிடம் அளித்த பேட்டியில் தெரி வித்ததை ஆளுநர் அவர்களிடம் தெரிவித்து, அதன் மீது நடவடிக்கை எடுக்க கோரிக்கை வைக்கப்பட்டது.

### அனிதா ராதாகிருஷ்ணனுக்கு காவல்துறை மூலம் மிரட்டல்!

திருச்செந்தூர் தொகுதி கழக சட்டமன்ற உறப்பினர் அனிதா இராதாகிருஷ்ணன், எம்.எல்.ஏ., அவர்களை அவதூறு வழக்கில் கைது செய்து தூத்துக்குடி மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஐந்து மணி நேரம் அடைத்து வைக்கப்பட்டு, சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க. கட்சியில் இணைந்திட வற்புறுத்தியதை ஆளுநர் அவர்களிடம் எடுத்துரைக்கப்பட்டது.

நாகர்கோவில் தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆஸ்டின் அவர்களை த.வெ.க.சார்பில் அவரை தொடர்பு கொண்டு சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க. கட்சியில் இணைந்திட வலியுறுத்தியதுடன், அவர் விரும்பிய துறை அமைச்சர் பதவி கொடுப்பதாக நிர்ப்பந்தித் தது குறித்தும் ஆளுநர் அவர்களிடம் எடுத்துரைக்கப்பட்டது.

### விலை பேசப்படும் எம்.எல்.ஏ.க்கள்!

வேப்பனஹள்ளி தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினர் சீனிவாசன் அவர்களையும் த.வெ.க. கட்சியில் இணையும்படியும், 50 கோடி ரூபாய் கொடுப்பதாகவும் வாரியத் தலைவர் பதவி அளிப்பதாகவும் ஆசைக் காட்டி அவரது சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்திட பேசியதாக ஆளுநர் அவர்களிடம் எடுத்துரைக்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்களின் நண்பர்கள், ஜான்ஆரோக்கியசாமி மற்றும் விஷ்ணுரெட்டி ஆகியோர் அரசு அலுவல்களில் தலையிடுவதையும் – அமைச்சரவைக் கூட்டங்களில் கலந்து கொண்டதையும் மற்றும் அவர்களுக்கு தலைமைச் செயலகத்தில் தனியாக அறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறித்தும் – அதேபோல், முதலமைச்சரின் பாதுகாப்பு விதிகளுக்கு முரணாக முதலமைச்சர் அவர்களின் தனி பாதுகாவலர் ஒருவர் பணியாற்றி வருவதும், அவர் முதலமைச்சர் அலுவலகம் உள்ளிட்ட எல்லா நிகழ்ச்சிகளிலும் முதலமைச்சருடன் சட்டத்திற்கு புறம்பாக அவருடனே பயணிப்பது குறித்தும் ஆளுநர் அவர்களிடம் எடுத்துரைக்கப்பட்டது.

### ஆளுநர் நடவடிக்கை எடுத்திட கோரிக்கை!

மேற்சொன்ன புகார்களை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி நாகர்கோவில் தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆஸ்டின், தலைமைக் கழக தலைமை சட்ட ஆலோசகர் பி.வில்சன், எம்.பி., சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் ஆகியோர் விளக்கமாக எடுத்துரைத்து, புகார் கடிதத்தை தமிழக ஆளுநர் அவர்களிடம் அளித்தனர். அனைத்து புகார்களையும் – புகார்களின் சாராம்சங்களையும் கவனமுடன் கேட்டறிந்த ஆளுநர் அவர்கள், இதன்மீது உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.

### ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

ஆளுநர் அவர்களை நேரடியாகச் சந்தித்து புகார் அளித்த பின்னர், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்களின் பேட்டி வருமாறு:-

தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டுள்ள குதிரை பேரம் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் குறித்து ஆளுநரிடம் நேரடியாக விளக்கினோம். அரசிற்குத் தொடர்பில்லாத ஜான் ஆரோக்கியசாமி, விஷ்ணுரெட்டி ஆகிய இரண்டு பேர் அமைச்சரவைக் கூட்டங்கள் முதல் அனைத்து உயர்மட்டக் கூட்டங்களிலும் முதல்வரோடு கலந்து கொண்டு அதிகாரிகளுக்கு உத்தரவு போடக்கூடிய கேவலமான நிலை உள்ளது. இதுபற்றி கடந்த 2 ஆம் தேதி புகார் மனு அளித்திருந்தோம். இன்று நேரிலும் அதன்மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லி கேட்டுக் கொண்டோம். ஆளுநரும் அவர்கள் அரசு கூட்டங்களில் கலந்து கொள்ள எந்தவித அதிகாரமும் கிடையாது என்ற நிலைப்பாட்டை வெளிப்படுதினார். எனவே அதுகுறித்து உரிய நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கை உள்ளது.

குதிரை பேரத்தின் உச்சமாக நேற்றைய தினம் அவதூறு வழக்கிலே தி.மு.க. எம். எல்.ஏ. அனிதா ராதாகிருஷ்ணன் கைது செய்யப்பட்டார். அவதூறு வழக்கில் கைது செய்யும் நடைமுறை இதுவரை இருந்ததில்லை. ஆனாலும் அவரை கைது செய்து 5 மணிநேரம் காவல்துறை விசாரணை நடத்தி உள்ளனர். அவதூறு வழக்கில் விசாரணையே தேவையில்லை அப்படி இருக்க விசாரணை என்ற பெயரில் குதிரை பேரம் நடத்தினர் என அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களின் பேட்டியிலேயே தெரிய வந்தது. தவெக வில் இணைந்துவிடுங்கள் என பேரம் பேசி உள்ளனர்.

அதேபோல தி.மு.க.வின் துணை அமைப்புச் செயலாளர் நாகர்கோவில் சட்ட மன்ற உறுப்பினர் ஆஸ்டின் அவர்களை தொடர்பு கொண்டு எந்த அமைச்சர் பதவி கேட்கிறீர்களோ அந்த இலாக்காவை தருகிறோம் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு வாருங்கள் என பேரம் பேசி உள்ளனர்.

அதோடு வேப்பனஹல்லி சட்டமன்றத் தொகுதி எம்.எல்.ஏ.வாக வெற்றி பெற்றுள்ள சீனிவாசன் அவர்களை தொடர்பு கொண்டு ‘50 கோடி ரூபாய் தருகிறோம் என்ன வாரியம் கேட்கிறீர்களோ அதை கொடுக்கிறோம்’ பதவியை ராஜினாமா செய்யுமாறு பேரம் பேசி உள்ளனர்.

### ஆளுநர் நடவடிக்கை எடுப்பார் என நம்புகிறோம்!

இது அனைத்தையும் புகாராக ஆளுநரிடம் அளித்துள்ளோம். ஆள்பிடிக்கும் பணியை தவிர ஆக்கப்பூர்வமான பணிகள் எதையும் இந்த தவெக அரசு செய்யவில்லை என்பதையும் தெளிவாக ஆளுநரிடம் எடுத்துக்கூறி உள்ளோம். நாங்கள் அளித்துள்ள புகார் மீது உரிய நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் கூறியுள்ளார்.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி தெரிவித்தார்.

## செம்பாக்கத்தில் கலைஞர் பிறந்த நாள் விழா!

செங்கல்பட்டு, ஜூலை 6–

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை யொட்டி செம்பாக்கம் வடக்கு பகுதி தொண்டர் அணி தி.மு.க. சார்பில் பகுதிச் செயலாளர் ஏ.கே.கருணா கரன் தலைமையிலும், தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஆர்.அருள் (எ) அருண்குமார் ஏற்பாட்டி லும் நடைபெற்ற 500 பொது மக்களுக்கு 30 நாட்களாக அறு சுவை உணவு, அன்னதானம் நிறைவு விழாவில் மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு உரையாற்றி 500 பொது மக்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முகம் பொறித்த தலா 1 கிராம் வெள்ளி நாணயத்தை வழங்கினார்.

இதில் மாவட்ட துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, து.மூர்த்தி, துணை மேயர் கோ.காமராஜ், பகுதிச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விளாத்திகுளத்தில் நடைபெற்ற மாநில பொதுக்குழு உறுப்பினர் ராஜாக்கண்ணு இல்ல விழாவில் முன்னாள் அமைச்சர்,தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் திருமதி.கீதாஜீவன், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.வி. மார்க்கண்டேயன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள். நிகழ்வில் தூத்துக்குடி மாநகர செயலாளர் ஆனந்த சேகரன், ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, சின்னமாரிமுத்து, அன்புராஜன், இம்மானுவேல், ராதாகிருஷ்ணன், செல்வராஜ், மும்மூர்த்தி, காசிவிஸ்வநாதன், பீக்கிலிபட்டி முருகேசன், மற்றும் வேலுச்சாமி, சூர்யா அய்யன்ராஜ், பாண்டியராஜன், கேப்டன் கேசவன், ரஞ்சித்,சென்றாய பெருமாள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.